சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 16 திங்கட்கிழமை (30 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 183

இன்றைய நாகரிகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு

தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கைக்கு இந்தியா ஒத்துழைப்பு தரும்!

பிரதமர் நரசிம்மராவ் அறிவிப்பு

கொழும்பு, மே 30

தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் இலங்கைக்குப் பூரண ஒத்துழைப்பை இந்தியா வழங்கும் என்று பிரதமர் பி. வி, நரசிம்மராவ் உறுதியளித்திருக்கிறார்.

கொழும்பு சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று இந்திய வானொலி கூறியது.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அரசியல் தீர்வு காணப்படும் என்று தாம் நம்புவதாகவும் திரு. ராவ் தெரிவித்தார்.

தனது அயல் நாடுகளுடன் செழிப்பான நல்லுறவை வளர்த்துக் கொள்ளவே இந்தியா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

சுழிபுரம், மே 30

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் காரைநகர் ஸ்ரீலங்கா இராணுவ - கடற்படை கூட்டு முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. சில ஷெல்கள் சுழிபுரம் பறாளாய் பகுதியை அண்டிய வெளிப் பிரதேசத்தில் வீழ்ந்து வெடித்தன. கடந்த சில தினங்களாக இரவு வேளையில் தொடர்ச்சியாகத் தாக்குதல் இடம்பெற்று வருகிறது.

(உ-28)

தமிழக சட்டசபை இடைத்தேர்தல் 2 இடங்களிலும் அ.தி.மு.க. வெற்றி

ஒன்றில் தி.மு.க. மற்றையதில் ம.தி.மு.க இரண்டாமிடம்

சென்னை, மே 30

தமிழகத்தில் கடந்த வியாழன்று நடைபெற்ற இரு சட்டமன்ற இடைத்தேர்தலிலும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தலைமையிலான அ. தி. மு க. வெற்றியீட்டியிருக்கிறது.

ஏனைய எதிர்க் கட்சிகள் பிளவுபட்டு நின்றதால் அ.தி.மு.க. சுலபமாக வெற்றி பெற முடிந்தது என அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

பெருந்துறையில்

பெருந்துறை சட்ட மன்றத் தொகுதியில் 1991 தேர்தலில் 52 ஆயிரம் அதிகப்படி வாக்குகளினால் வெற்றியீட்டிய அ. தி மு. க. இம்முறை அங்கு 32 ஆயிரம் வாக்குகளினாலேயே வெற்றிபெற முடிந்தது.

அத்தொகுதியில் தி. மு க. ஆதரவுடன் போட்டியிட்ட மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளரை வை. கோபாலசாமியின் மறுமலர்ச்சி தி.மு க. வேட்பாளர் மூன்றாம் இடத்துக்குத் தள்ளியிருப்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் வேட்பாளர் நான்காம் இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

பெருந்துறையில் முக்கிய கட்சிகள் பெற்ற வாக்குகளின் விபரம் வருமாறு:-

★	அ.தி.மு.க.	— 55,730
★	ம.தி.மு.க	— 23,452
★	மார்க். கம்யூ.	— 20,449
★	காங்கிரஸ்	— 12,371

காங்கிரஸ், பாரதீய ஜனதா, பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்கள் உட்பட 35 பேர் கட்டுப் பணம் இழந்தனர்.

மைலாப்பூர்ரில்

மைலாப்பூர் சட்டமன்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப ..... 'ஜெயலலிதாம்பி கையை அசைக்க முடியாது எண்டு சொல்லுங்கோ..... !

குடும்ப வாரிசு முறையால் சு. கவுக்குள் குழப்ப நிலை!

கொழும்பு, மே 30

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் குடும்ப வாரிசு உரிமை அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக சுகட்சிக்குள் பலத்த குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் இதனால் ஆத்திரமுற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைவி திருமதி பண்டாரநாயக்காவுக்கு அடுத்தவராக நீண்டகாலம் கருதப்பட்டு வந்த மைத்திரிபால சேனநாயக்கா போன்றோர் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட இரண்டாம் இடத்துக்கு சிறிமாவின் மகளான சந்திரிகா குமரணதுங்க கொண்டுவரப்பட்டிருக்கிறார்,

கட்சியின் உபதலைவரான மைத்திரிபால சேனநாயக்கா அப்பதவியில் இருக்க, கட்சி பிரதித் தலைவர் என்ற புதுப் பதவி உருவாக்கப்பட்டு அப்பதவிக்கு சந்திரிகா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கட்சியின் முன்னர் அனுரா பண்டாரநாயக்கா வகித்த தேசிய அமைப்பாளர் பதவி, சிறிமாவின் சகோதரரான அநுருத்த ரத்வத்தவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இப்பதவி கட்சியில் பிரதித் தலைவர் பதவிக்கு அடுத்த முக்கியத்துவமான ஒன்று எனக் கூறப்படுகிறது.

- இவ்வாறு கட்சியில் முதல் மூன்று முக்கிய பதவிகளையும் தமது குடும்பத்தவர்களின் வசமே - தகுதியான பிறதலைவர்கள் இருக்கத் தக்கதாக - சிறிமாவே வைத்திருப்பது கட்சிக்குள் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

(உ)

வவுனியா, கிழக்கிற்கு விரைவில் டி.பி.விஜயம்

கொழும்பு, மே. 30

ஜனாதிபதி டி பி விஜேதுங்கா விரைவில் கிழக்கு மாகாணத்திற்கும் வவுனியாவுக்கும் விஜயம் செய்யவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி எம். பிக்களும், அமைச்சர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை மக்கள் மத்தியில் எடுத்து விளக்க வேண்டும் என பணிப்புரை விடுத்துள்ள ஜனாதிபதி, அந்த நோக்கத்திற்காகவே வவுனியாவிற்கும், கிழக்கிற்கும் விஜயம் செய்ய உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-5)

சூரியகந்த மனித புதைகுழி விடயம்:

இராணுவத்தினர் 32 பேரின் வாக்குமூலங்கள் பதிவாகும்

கொழும்பு, மே 30

எம்பிலிப்பிட்டி, சூரியகந்த பகுதியில் அண்மையில் தோண்டி எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பாக 32 இராணுவத்தினரின் வாக்குமூலங்களை குற்றவியல் புலனாய்வுப் பணியகம் பதிவு செய்ய இருக்கிறது.

இதற்காக சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை குற்றவியல் புலனாய்வுப் பொலீஸார் முன்னிலையில் ஆஜர் செய்யும்படி இராணுவத் தலைமையகத்துக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருக்கிறது.

இத்தகவலை பாதுகாப்பு அமைச்சு சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-எ-6)

வடமராட்சி கிழக்கில் பீரங்கித் தாக்குதல்

வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதிகளில் நேற்றும், நேற்று முன்தினம் இரவும் கடற்படையினர் கடுமையான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 6 மணிக்கு மருதங்கேணி, நாகர்கோவில் கரையோரப் பகுதிகளில், மீனவர் குடியிருப்புக்களை நோக்கி இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினமிரவும் 8 மணிக்கு வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கி ஹெலிக்கொப்டர் ஒன்று பல தடவை வட்டமிட்டு பறந்ததைத் தொடர்ந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இவ்வேளைகளில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் நள்ளிரவு பலாலி இராணுவ முகாமில் இருந்தும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தொண்டமானாறு, கெருடாவில், உடுப்பிட்டி வெட்டை வெளிகளில் இச்ஷெல்கள் விழுந்து வெடித்தன.

(உ-15)

ஒரே நாளில் 400 தமிழர்கள் கொழும்பு நகரில் கைது!

யாழ்ப்பாணம், மே 30

கொழும்பு நகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் அண்மையில் ஒரேநாளில் நானூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது

கடந்த 18 ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி பொதுசனத் தொடர்பு சாதனங்களும் அரசும் மூடிமறைத்துள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களில் அநேகமானோர் தற்பொழுதும் பொரளையில் உள்ள குற்றத்தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெரும்தொகைப் பணத்தை செலுத்திய சிலர் விடுவிக்கப்பட்டனர்.

கொட்டாஞ்சேனை மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையினான பொலீஸார் வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் சுற்றிவளைத்து இக்கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

வயது, பால் வேறுபாடின்றி தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். குறிப்பாக ஓரளவு பணவசதி உள்ளவர்களே கைது செய்யப்பட்டதாகவும் —

அவர்களிடமிருந்து பணம் அபகரிக்கும் நோக்குடனேயே இக்கைது இடம்பெற்றதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் தமிழரிடம் தொடர்ந்து கொள்ளை

கொழும்பில் கடந்த சில தினங்களாக தமிழர்களிடமிருந்து பொருள்கள் மற்றும் பணம் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வெள்ளவத்தை, மருதானை கொட்டாஞ்சேனை, புறக்கோட்டைப் பகுதிகளிலேயே குண்டர் குழுக்கள் அதிகமாகத் தமது கைவரிசையைக் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது

அதிகாலை வேளையிலும், இரவிலும் தமிழர்கள் கூடும் இடங்களில், கொச்சைத் தமிழில் பேசுவோரைக் கொண்ட குண்டர் குழுக்கள் இத்தகைய கொள்ளைகளில் ஈருபடுகின்றனவாம்.

(உ)

யுத்தத்தை முடிப்பதற்கே சு, க, அரசு முன்னுரிமை தரும்

அக்கட்சியின் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, மே 30

சுதந்திரக் கட்சியின் தலைமையிலான எதிர்கால அரசாங்கம் வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அதிஉயர் முன்னுரிமை கொடுத்து செயல்படும்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக மீண்டும் தெரிவு செ[illegible] கேகாலை மாவட்ட எம். பியான — தர்மசிறி சேனநாயகா முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளுடன் [illegible] நடத்தும் என்றும் அவர் கூறி[illegible]

சொத்தி உபாலியுடன தொடர்பான அரசியல்வாதிகள் மீது விசாரணை

கொழும்பு, மே 30

''பாதாள உலக'' தலைவர் சொத்தி உபாலியுடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் என்று கருதப்படும் உயர் நிலை அரசியல் பிரமுகர்கள் மற்றும் அவருக்கு ஆயுதங்கள் வழங்கியவர்கள் என்று கருதப்படுவோர் ஆகியோர் குறித்து விசாரணையை நடத்துவது என்று குற்றப்புலனாய்வுப் பணியகம் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது

தற்சமயம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சொத்தி உபாலி பொலீஸ் விசாரணையின் போது வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இவ் விசாரணை நடத்தப்படவிருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை —

சொத்தி உபாலியுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் — கொழும்பில் உள்ள பொலீஸ் அதிகாரிகள் சிலரை வேறு பகுதிகளுக்கு இடமாற்றஞ் செய்ய பொலீஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

ஸ்ரீ. ல. சு, கவின் எம். பி கேள்வி:

கைதான அப்பாவித் தமிழரை செஞ். குழுவினர் பார்த்தனரா?

'சொத்தி உபாலி' பற்றி மட்டும் கவலைப்படுவது ஏன்?

கொழும்பு, மே 30

காவலில் வைக்கப்பட்டுள்ள 'பாதாள உலக' தலைவர் சொத்தி உபாலியைச் சென்று பார்த்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் நீர்கொழும்பில் கைதாகி தடுத்து வைக்கப்படும் அப்பாவித் தமிழ் மக்களை ஏன் சென்று பார்க்கவில்லை?

கம்பஹா மாவட்ட சுதந்திரக் கட்சி எம் பியான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்ட கேள்வியை எழுப்பினார்.

கைதாகியுள்ளவர்களை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சென்று பார்ப்பது வழக்கமே. அப்படியிருக்க சொத்தி உபாலியை செஞ்சிலுவைச் சங்கத்தினர் சென்று பார்த்ததைக் கண்டிக்கிறீர்களா — என்று செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ கேட்டதற்கு அவர் இவ்வாறு பதில் கேள்வி எழுப்பினார்.

திரு. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேலும் சொன்னதாவது:

அவசரகால விதியின் கீழ் நீர்கொழும்பில் பல தமிழர் கைதாகி வருகின்றனர். இது சம்பந்தமான வழக்கு ஒன்றில் நான் தெரிபட்டிருந்தேன்.

கொழும்பு நகைக்கடை ஒன்றில் பணிபுரியும் ஒருவர், தனது மைத்துனரைச் சந்திப்பதற்காக நீர்கொழும்புக்குச் சென்றார். இரவாகிவிட்டதால் அவர் மைத்துனரின் வீட்டில் தங்கிவிட்டார் அன்று இரவு 9 மணியளவில் பொலீஸார் அந்த வீட்டுக்கு சென்று அவரையும் வீட்டின் உரிமையாளரான அவரது மைத்துனரையும் கைது செய்தனர்.

விசாரணையின் பின்னர் நீர்கொழும்பில் இருந்து வந்தவரை விடுதலை செய்துவிட்டு, மைத்துனரை அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் தடுத்து வைத்தனர். பின்னர் நீதிமன்றம் மைத்துனருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதித்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

உயர்தரப் பரீட்சை பெறுபேறு: யாழ் பாடசாலைகள் முன்னணி!

அகில இலங்கை ரீதியில் யாழ். இந்து முதல் இடத்தில்!!

யாழ்ப்பாணம், மே 30

1992 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜி சீ ஈ உயர்தரப் பரீட்சையில் பாடசாலைப் பெறுபேறு மதிப்பெண் அடிப்படையில் இலங்கையில் உள்ள மொத்தம் 30 பாடசாலைகள் அதி திறமையைக் காட்டியுள்ளன.

அவற்றில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பாடசாலைகளும் அடங்கும். எட்டுப் பாடசாலைகள் ஏனைய வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவை. பன்னிரண்டு பாடசாலைகள் கொழும்பைச் சேர்ந்தவையாகும்.

பாடசாலைகளின் பெறுபேற்றுத் திறமை — மதிப்பெண் ரீதியில் — பரீட்சைப் பகுதியால் பின்வரும் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது.

1. பாடசாலைகளில் இருந்து தோற்றும் மாணவர்கள் ஒவ்வொரு பாடத்துக்கும் பெற்ற மொத்தப் புள்ளிகள் (தரம் பிரிக்கப்படாமல்) வகுக்கப்படுகின்றன. எல்லாப் பாடசாலையில் இருந்து தோற்றும் சகல மாணவர்களின் மொத்தப் புள்ளிகளும் ஒன்பது பிரிவுகளாக வகுக்கப்படுகின்றன.

2. பின்னர் குறிப்பிட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

காவேரி சீயாக்காய்

சம்போ தடை செய்யப்பட்டது என்ற கவலை வேண்டாம். இருக்கவே இருக்கிறது. காவேரி சீயாக்காய் பவுடர் நுரைவளம் கொண்டது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காதீர்கள். காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். (31074)

காணி விற்பனைக்கு

நுணாவில் சந்தியில் இருந்து 200 யாரும், கண்டி றோட்டில் இருந்து 50 யார் தூரத்தில் அமைந்ததும், 350—400 முதிர்ந்த பனைமரங்களைக் கொண்ட "வீரக்கோடியன் வளவு" 12 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. தம்பையா பிள்ளை (609) 151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (31148)

தவறிவிட்டது

சபாபதிப்பிள்ளை இராஜேஸ்வரனுக்கு சொந்தமான 641332526V இலக்க அடையாள அட்டை 24-05-94 அன்று யாழ். மாநகரசபை எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கலைமகள் வர்த்தக நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (31158)

மணமகள் தேவை

41 வயதுடைய இந்து, திருவோண நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற, அரசாங்க ஸ்தாபனத்தில் தலைமை லிகிதராக கடமைபுரிபவருக்கு 35 வயதிற்குட்பட்ட ஆசிரிய தொழில்புரிபவர் விரும்பத்தக்கது. தொடர்பு: இல 652, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31165)

மணமகன் தேவை

இந்து, 33 வயது, இரண்டில் செவ்வாய், A/L சித்தியடைந்த 5 அடி 7 அங்குலம் உயரமுள்ள, நல்ல நிறமுள்ள அழகிய பெண்ணிற்கு அரசாங்க உத்தியோகம் அல்லது தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் மணமகன் தேவை. சீதனம் பேசித்தீர்க்கலாம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. இல. 940, மே/பா உதயன். (7424)

யாழ். இந்து, 30 வயது, செவ்வாய்க்குற்றமுள்ள, திருவாதிரை நட்சத்திரம், 56 பாவம், வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை. இல. 650, மே/பா உதயன், நாவலர் வீதி. (31099)

பரீட்சை வழிகாட்டி

க. பொ. த. சாதாரணதர மாணவர்களுக்காக சரித்திரப் பரீட்சை வழிகாட்டி வினா-விடை நூல் வெளிவந்து விட்டது. தொகுப்பு: இராஜகிருஷ்ணர் இரகுநாதன் வெளியீடு: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7417)

நூல் அன்பளிப்பு

சாவகச்சேரி, மே 30

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் உலக சமயப் பெருவிழாவின் போது ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா பாடசாலைகளின் அதிபர்களுக்கும் சாவகச்சேரி நகரசபை செயலாளருக்கும் நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். (க-31)

விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் மே30

தமிழர் புனர்வாழ்வுக்கழக வலி வடக்குப் பிரிவின் இடம்பெயர்ந்தோர் முகாம்களின் பாலர்பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டி அண்மையில் மல்லாகம்பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூக நற்பணிப் பிரிவு இணைப்பாளர் திரு கா. சிவா தலைமையில் நடைபெற்றது. (எ)

திருநெல்வேலி

கலைக் கோவில்

கீழைத்தேய நடன, ஈழத்து நாட்டாராடல், ஆடற்கதை

நிறுவகத்தின் வளர்ச்சிப்பணிக்காக

"பஸ்மாசுரன் 77" "என்னதான் முடிவு"

ஆடற்கதைகள் வரிசையில்

கலைஞர் வேல்ஆனந்தன் ஆடல் அணியினர்

அளிக்கும்

☆ முழங்கும் முரசு ☆

(ஆடற்கதை — S-Opera)

"என்னொரு தூக்கமோ ஏனிந்த மயக்கமோ
எழுந்து நீ வந்திடில் எதிரியும் ஓடலாம் — கவிஞர் புதுவை
"விரைவில் யாழ் நகரின் பல அரங்குகளில்"

கலைஞரின் படைப்பு கண்ணுக்கு விருந்தாகவும்
கருத்துக்கு மருந்தாகவும் அமையட்டும்

சிங்கம்ஸ் பார்மஸி

யாழ்ப்பாணம். [31159]

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

(கால்நடை வைத்தியசாலை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)

முக்கிய அறிவித்தல்

கிளைக் குழுத் தேர்தல் - 1994

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான நியமிப்புப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 04-06-1994 சனிக்கிழமை முற்பகல் 9-00மணி முதல் 10-00 மணி வரை அபேட்சகர்கள் நியமிப்புக்கு ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றைய தினம் முற்பகல் 10-00 மணி முதல் 11-00மணி வரை தேர்தல் உத்தியோகத்தரால் எழுத்து மூலமான ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் திகதி 11-06-1994 சனிக்கிழமை முற்பகல் 9-00மணி தொடக்கம் பிற்பகல் 4-00மணி வரை நடைபெறும். பின்வரும் கிளைகளுக்கான நியமிப்புப் பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கிளை இல.	கிளையின் பெயர்	ஏற்றுக்கொளளும் இடம்
1	திருநெல்வேலி	நல்லூர் ப. நோ. கூ. சங்க காரியாலயம் திருநெல்வேலி
2	அரியாலை	யாழ். ப. நோ. கூ. சங்க கிளை இல. 20 அரியாலை
3	கல்வியங்காடு	சங்கிலியன் மன்றம் (படிப்பகம்) சட்டநாதர் கோயில் முன்பாக
4	உடுவில்	கற்பகுளை சனசமூக நிலையம் உடுவில்
5	கோண்டாவில்	நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலடி சனசமூக நிலையம் கோண்டாவில்
6	யாழ்ப்பாணம்	கால்நடை வைத்தியசாலை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
7	வண்ணார்பண்ணை	ஐயனார் கோவிலடி வாசிகசாலை, வண்ணார்பண்ணை
8	சுண்டிக்குளி, ஈச்சமோட்டை	யாழ். ப. நோ. கூ. ச. கிளை இல. 25, ஈச்சமோட்டை
9	கொழும்புத்துறை	யாழ். ப. நோ. கூ. ச. கிளை 21, கொழும்புத்துறை
10	இணுவில்	யாழ். மா. அபி. கூ. சங்க பால் சேகரிப்பு நிலையம், இணுவில்
11	நல்லூர்	இலங்கைநாயகி சனசமூக நிலையம், கல்வியங்காடு
12	தாவடி	தாவடி விநாயகர் வாசிகசாலை, தாவடி

★ நியமிப்புப் பத்திரங்களை சங்கக் காரியாலயத்தில் ரூபா 10/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

பொ. கணேசலிங்கம்,
தேர்தல் உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

நினைவழியா ஐந்தாண்டில்.........

குணரத்தினம் இராசசேகரம்

வீரவேங்கை தரன்

தமிழீழ மண்ணில்: **17-02-1971**
விடுதலை வேள்வியில்: **30-05-1989**

ஒளிபடைத்த கண்ணுடனும்
உறுதி கொண்ட நெஞ்சுடனும்
தளர்வடையா விடுதலைப் பற்றுடனும்
தம்பியின் பாசறையில்
புடமிட்ட வீர மைந்தனே
எங்கள் தரனே!

நெய்தல் நிலமாம் செம்பியன்பற்றில் விடுதலைப் போரில் ஆகுதியாகிய உன்னை ஐந்தாம் ஆண்டில் நெஞ்சில் நினைவலைகளுடன் பிரார்த்திக்கின்றோம்.

பேர்த்தியார் நடி வள்ளியம்மாளும்,
குடும்பத்தினரும்,
பொகரட்ணம் ஸ்ரோர்ஸ்,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

நண்பர்கள்,
ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை. [31104]

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
03
05
1955

மறைவு:
30
05
1991

அமரர்

சுப்பிரமணியம் தெய்வேந்திரராசா

(ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை)

திதி: 26 — 05 — 1994

ஆண்டுகள் மூன்று கழிந்தனவாயினும்
ஆறாத்துயரில் வாடுகின்றோம் அருமைத்
தெய்வமே!

மூண்டெழும் துயரக் கடலில் மூழ்குகின்றோம்
முத்தான உன்கதையைக் கூறாயோ -
அன்புத் தெய்வமே!

ஈண்டிங்கு வந்திடுவாய் உந்தன்
இனியமுகம் இனியஎழில் காண்பதற்கே
எம் குலக்கொழுந்தே!

மீண்டொருநாள் வாராயோ செல்வ!
மின்னலென மறைந்து விட்ட- எம்குண்டாமணியே!

அள்ளி அள்ளி அன்பினைச் சொரிந்தோம்
துள்ளி துள்ளி மழலை பொழிந்தாய்
பள்ளி சென்றிடப் பாங்குடன் அனுப்பினோம்
தெள்ளிய அறிவினைத் தேடியே கற்றாய்
இழப்பினைத் தாங்காது அலறித் துடிக்கின்றோம்
இளமைத் துடுக்குடனே ஓடியே மறைந்தாய்
உன்னமது சாந்திபெற உன்நினைவு கூருகிறோம்
உன்னம் விட்டகலாது ஒளிவிளக்காய்
வாழ்ந்திடுவாய்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கண்ணீரஞ்சலிகளுடன் நினைவுகூரும்,
அம்மா, மாமி, சின்னையா, அக்காமார்,
மச்சாள், மைத்துனர்மார், அண்ணர்,
மருமகள், பெறாமக்கள்.

42/1, ஆத்திசூடி வீதி,
[illegible] (31166)

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்

சட்டநாதர் கோவில் பின் வீதி,
நல்லூர்

தமிழ் ஈழ ஆடிவேல் விழா

25 - 07 - 1994 முதல் 25, 26, 27 வரை மூன்று தினங்கள் ஸ்ரீ பாலகதிர்காமத்தில் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக யாழ்நகர் வீதிகள், காங்கேசன்துறை வீதி, திருநெல்வேலி வீதி வழியாக ஆலயத்தை வந்தடையும்.

ஆடிவேல் ரதம் உருவாக்கம்:

திரு. ஆறுமுகம் கந்தசாமி சிற்பாசாரியார்

திருநெல்வேலி மேற்கு, காளி கோவிலடி.
அவர்களால்
நிர்மாணிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இங்ஙனம்
தேவஸ்தானம்

(31170)

7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
07
03
1968

ஆண்டவன் அடியில்:
30
05
1987

இராசகோபால் ராஜ்மோகன்

(மருத்துவ பீடம் பேராதனை)

அறிவென்னும் சுடரால்
அனைவரையும் கவர்ந்த மோகா
உயிர்காக்கும் மருத்துவனாய்
உலகுக்கு உதவுவாய் என காத்திருக்க
உயிர்பறிக்கும் காலனவன்
உனை கவர்ந்து சென்றானோ
நாம் அறியோம்.

உன் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

திக்கம். [7414]

9-ம் ஆண்டு நினைவு தினம்

அமரர் வே. சி. நடராசா

(முன்னாள் வர்த்தகரும், மிக் கைத்தொழில் நிறுவன ஸ்தாபகரும்)

தோற்றம்: 10 — 03 — 1921
மறைவு: 08 — 06 — 1985
திதி: 30 — 05 — 1994

எங்கள் அன்பு ஐயா!

திருவருளுடன் இரண்டறக் கலந்து ஆண்டுகள் ஒன்பதாகிய போதிலும் உங்கள் திருமுகத்தை காண பதற்றாக தவிக்கிறோம் ஐயா!

இன்றைய தினத்தில் உங்கள் ஆத்மா சாந்தி பெற உற்றமும், சுற்றமும் சூழ ஆத்ம சாந்திப் பூசையும் மகேஸ்வர பூசையும் செய்து பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

28, சிவன் புது வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (31160)

உதயன்
393/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

புகைத்து மாளாதீர்!

நாளை மே மாதம் முப்பத்தோராம் திகதி அனைத்துலக புகைப் பொருள் மறுப்புத் தினமாகும். புகைத்தலினால் மனித உடலுக்கும் அதன் விளைவாக உயிருக்கும் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு, குறிப்பாக இளம் சமுதாயத்தினருக்கு உணர்த்துவதே இத்தினத்தைக் கொண்டாடுவதன் நோக்கமாகும்.

புகைப்பதனால் உடலுக்கு உண்டாகும் பாதிப்புகள், ஆபத்தான நோய்கள் குறித்து இப்போது தான் எடுத்துரைக்கப்படுகிறது என்பதல்ல. நான்கு ஐந்து தசாப்தங்களாகவே, அனைத்துலக ரீதியில் அது சம்பந்தமான பிரசாரம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

ஆனால் புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்ததா? இல்லை. மேன்மேலும் அதிகரித்து வருகிறது.

இளம் வயதில் புகைப்பதனை ஒரு நாகரிகமாகக் கருதி, அந்தப் பழக்கத்துக்கு அடிமையாவோர் மத்திய வயதிலேயே மரணமடைய நேரிடுகிறது. இல்லையேல் வாழ்நாள் முழுவதும் நோயாளர்களாகவே அவதிப்பட வேண்டியதாகிறது. புகை 'இன்பம்' வாழ்வின் துன்பமாகி விடுகிறது!

புகை பிடிப்பதனால் உடம்பின் ஒவ்வொரு கலமும் கருகிப் போகிறது! நீடித்த நேரம் புகைப்பதனால் கலம் சிதைந்து போகிறது; அதனால் உடலின் எந்த அங்கத்திலும் புற்றுநோய் வெகு இலகுவாக உண்டாகக் கூடிய சாத்தியம் அதிகமாகிறது என்பதனை விஞ்ஞான ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன.

இதனை அறியாது, உணராது கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற போக்கில் வயதில் இளையவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகி விடுகிறார்கள். புகைத்தல் பழக்கமுடைய ஒருவருக்கு சுவாசப்பை நோய், இருதய நோய், புற்றுநோய் மற்றும் பலவித ஆபத்தான நோய்கள் உண்டாகின்றன.

மதுப் பழக்கம் எவ்வாறு வாழ்க்கையைக் கெடுக்குமோ அதுபோலவே புகைப் பழக்கமும் அதனைச் சீரழிக்கும். பொதுவாகப் போதைப் பொருள் பயன்படுத்துபவன் தனது வாழ்க்கையை மட்டுமன்றி தன்னைச் சார்ந்தவர்களினதும் (மனைவி, பிள்ளைகளினதும்) வாழ்வைப் பாழாக்குகின்றான்.

மேலும் புகைத்தல் பழக்கமுடைய பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் கூட உடல்நலம் குன்றியவர்களாக வார்கள் என்பது மருத்துவ ஆய்வின் விளக்கம். மொத்தத்தில் புகை பிடித்தல் சமூகக் கேடாக மாறி நாட்டின் மனித வளத்தை வேரறுத்து விடுகிறது!

ஐந்தில் வளையாதது ஒரு போதும் ஐம்பதில் வளைய மாட்டாது. தொட்டில் பழக்கமே சுடுகாடு போகும் வரை ஒருவனைப் பற்றிக் கொள்ளும். ஆகையால் இளம் வயதினர் புகைத்தல், மது அருந்துதல் மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமையாதல் ஆகிய அழிவார்ந்த பழக்கங்களுக்கு ஆளாகாமல் தடுப்பது பெற்றோரினதும், ஆசிரியர்களதும் தலையாய பொறுப்பாகும். இப்பழக்கங்களால் ஏற்படக் கூடிய வாழ்க்கை அழிவை அவர்களின் மனதில் பதியும் வண்ணம் எடுத்துப் புத்திமதி சொல்வதிலேயே வெற்றி தங்கியுள்ளது.

புகைத்தல் பொருள்கள் குறித்து பெரிதாக விளம்பரப்படுத்த அனுமதித்துக் கொண்டு புகைத்தல் உடலுக்குக் கேடு விளைவிக்கும் என்று வாசகம் போடுவதால் என்ன பயன்? புகைத்தல் பொருள்கள் உற்பத்தி, விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை இழக்க விரும்பாத அரசு இப்படி ஒரு நாடகம் போடுகிறது. அந்த நாடகத்தைப் பார்த்துத் தமிழர்கள் ஏமாளிகளாகிவிடக் கூடாது!

வாழ்க்கை வாழ்வதற்கே. நாமாக அழிந்து போவதற்கு அல்ல. சிங்களப் பேரினவாதம் தமிழர்களை அழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கும் இவ்வேளையில், நாமாகவே அழிவது என்பது அந்தப் பேரினவாதத்துக்கும் அரசுக்கும் பெருவெற்றியாகி விடும்!

பின்தங்கிய பாடசாலைகளுக்கு
நேரடியாக ஆசிரிய நியமனம்
வர்த்தமானி விரைவில் வருமென அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே 30

நாட்டில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கற்பிப்பதற்கு நேரடியாக அப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பின்தங்கிய பாடசாலைகளின் பெயர்கள் விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

கல்வி கலாசார அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்குபண்டார இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைகளுக்கு விண்ணப்பதாரிகளில் இருந்து ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் போது குறித்த பாடசாலை அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவில் உள்ள தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடெங்கிலும் உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமுகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-5)

பிரதேச சுகாதார அலுவலகம் கிளிநொச்சியில் ஜூன் 1முதல்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கென தனியான பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஒன்று நாளை மறுநாள் புதன்கிழமை முதல் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இயங்கவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பதில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்பு முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரியாகப் பணியாற்றி வந்தார்.

இதுவரை காலமும் கிளிநொச்சி மாவட்டம் வட பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கீழ் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தனியான பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன. (எ-162)

பின்தங்கிய பாடசாலைகள் கல்வி திட்டத்துக்கு நிதியுதவி
சாரதா சேவாச்சிரமம் வழங்கியது

யாழ்ப்பாணம், மே 30

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பிரசங்க நூற்றாண்டு நினைவையொட்டி, பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பல்வேறு சமுகநல உதவிகளைச் செய்து வருகிறது.

குடாநாட்டின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் விதத்தில், வசதி குறைந்த மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குதல், பின்தங்கிய பாடசாலைகளின் மேம்பாட்டுக்கு உதவுதல் என்பனவும் அத்திட்டங்களில் அடங்கும்.

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் கண்காணிப்பின் கீழ்வரும் பின்தங்கிய பாடசாலைகளின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக புதியதிட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

அத்திட்டத்திற்கென சாரதா சேவாச்சிரமம் பத்தாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்யத் தீர்மானித்துள்ளது.

அதில் முதலாவது கட்ட அன்பளிப்பான 5,000 ரூபாவை சேவாச்சிரம சுவாமிகள் ஸ்ரீமதி சித்ரூபானந்தா, அண்மையில் கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. க. கந்தசாமியிடம் அவரது அலுவலகத்தில் வைத்துக் கையளித்தார்.

அதே நாளில், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை இறுதி ஆண்டில் பயிலும் மாணவி செல்வி சி. கிறிஸ்ரோஜினிக்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசில் உதயன் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களையும் சேவாச்சிரமம் வழங்கிவருகிறது.

அடிப்படை உரிமையை மீறியதாக
பொலீஸிடம் நட்டஈடு கோரி இராணுவ கோப்ரல் வழக்கு

பொலிஸார் தமது அடிப்படை உரிமைகளை மீறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி இராணுவக் கோப்ரல் ஒருவர் உயர்நீதி மன்றத்தில் 10 லட்சம் ரூபா நட்ட ஈடு கோரும் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கோப்பரல் ஈ. ஏ. விஜேநாயக்கா தமது மனுவில் கூறியிருப்பதாவது;

மன்னப்பிட்டிப் பொலீஸ் காவலரணில் வைத்துப் பொலீஸார் என்னைத் தாக்கினர்.

எட்டாம் வகுப்பு சித்தி பெறாத இராணுவத்தினரை தாங்கள் மதிக்கப் போவது இல்லை என்று கூறியே பொலீஸார் என்னைத் தாக்கினர். இதன் மூலம் பொலீஸார் எனது அடிப்படை உரிமைகளை மீறிவிட்டனர். ஆகவே எனக்கு பத்து லட்சம் ரூபா நட்ட ஈடு வழங்குப்படி உத்தரவிடுமாறு கோருகின்றேன்'' —

இவ்வாறு அவர் தமது மனுவில் கூறியுள்ளார். (எ-6)

அடுப்பு உற்பத்தியில் பயிற்சி வழங்குவதற்கு ஏற்பாடு

மக்களின் தேவைக்கு ஈடு கொடுக்கும் வகையில் இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அடுப்பு உற்பத்தி நிலையம் ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சந்திப் பகுதியினரால் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் அமைக்கப்பட்டு வருகிறது.

மட்பாண்ட உற்பத்தியாளர்கள் மூலமே தற்போது அடுப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. எனினும் அதிகரித்துவரும் தேவைக்கேற்ப உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலேயே இந் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந் நிலையத்தில் அடுப்பு உற்பத்தியில் பயிற்சியும் அளிக்கப்படவிருப்பதால் பயிற்சி பெறுபவர்கள் இந் நிலையத்திலேயே தொழில் வாய்ப்புப் பெற வாய்ப்புண்டு என்றும், இதனால் இப்பயிற்சி நிலையம் உற்பத்தியைத் தொடங்கும் போது பலருக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

மாத்தளை ஹுசேன் கொலை உபாலி குழு நடத்தியதாம்!

கொழும்பு, மே 30

மாத்தளை மாநகரசபை உறுப்பினர் ரஸ்மர் ஹுசேனின் படுகொலையில், தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகின் தலைவர் சொத்தி உபாலியுடன் தொடர்புள்ள ஆறு நபர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்த நபர்களைக் கைது செய்வதில் கொழும்பு, கட்டுகாஸ்தோட்டைப் பகுதிகளில் இரகசியப் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இதேவேளை — ஹுசேன் கொலை பற்றி தற்போது நடத்தப்பட்டுவரும் விசாரணையைப் பயனற்றதாக்கும் முயற்சியில் [illegible] வாதிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என [illegible] படுகிறது. (எ-6)

ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மே. 30

யாழ். பல்கலைக் கழகத்தில் சேர். பொன். இராமநாதனினால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேக தின விழா இன்று திங்கள் காலை 7மணி முதல் நடைபெறவுள்ளது.

காலை 7மணிக்கு நவோத்தர ஸகஸ்ர சங்காபிஷேகமும் பிற்பகல் 1 - 30 மணிக்கு திருக்கல்யாணமும் பிற்பகல் 4 மணிக்கு சுவாமி வீதியுலாவும் இடம்பெறும்.

★ ★ ★

சாவகச்சேரி கிழக்கு பெரிய மாவடி ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் நாளை செவ்வாய் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-5-31)

★ ★ ★

வல்லை ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் நடைபெறும்:

அடுத்தமாதம் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ-5)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு இலஞ்சி ஆரணியம் மண்டுவில் கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. (உ-31)

விவசாயி மரணம்

மல்லாவி, யோகபுரத்தில் கு. மயில்வாகனம் (வயது45) என்பவர் மின்னல் தாக்கியதால் உயிரிழந்தார்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த இவர் கடுமையான மழைக்கு மரம் ஒன்றின் கீழ் ஒதுங்கியிருந்த போது மின்னல் தாக்கியது என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ-173)

பிறப்புச்சான்றிதழ் வழங்கப்படுகிறது

1954ஆம் ஆண்டுக்கு பின் பிறந்தவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ் பிரதிகள் தற்சமயம் வழங்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பணிப்பாளர் திரு. சுஸ்வரதாசன் அறிவித்துள்ளார்.

இந்த பிரதிகள் வழங்கும் புத்தகம் இல்லாமையால் இவ்வேலைகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது

ஆரம்ப பாடசாலை

தென்மராட்சி,மே. 30

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் விரைவில் ஆரம்பப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பகுதி மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைப் பிரகாரம் இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு தென்மராட்சி கல்விக் கோட்டத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (எ-117)

நூல் வெளியீடு

திரு. பா. தனபாலன் எழுதிய ''அறிவியல் சிந்தனைகள்'' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை சுழிபுரம் யா/ விக்ரோறியாக் கல்லூரியில் அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறும்.

[illegible] ஆலோசகர் திரு. சுந்தரம் [illegible] நிகழ்த்துவார். (எ)

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டில் உள்ள
படித்த இளைஞர் யுவதிகளுக்கு கம்பியூட்டர் தொழில்நுட்ப பயிற்சி
ஜுலை 20 ஆரம்பமாகும்

கொழும்பு, மே 30

தொழில் அற்ற 20 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு எதிர்வரும் ஜுலை 20ஆம் திகதி முதல் கம்பியூட்டர் தொழில்நுட்ப பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் பயிற்சிகள் நடத்தப்படும் என்றும் பயிற்சிக் காலத்தின்போது பயிற்சியாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் ஆலோசகரும் கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளருமான கலாநிதி விக்கிரம வீரசூரிய இத்தகவல்களைத் தெரிவித்தார்.

(எ-5)

அறிஞர்களின் படைப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும்!
பேராசிரியர் தெரிவிப்பு

அறிஞர்களின் ஆராய்ச்சிகளும் ஆக்கங்களும் காலத்தால் அழிந்து போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவரான பேராசிரியர் சிவசாமி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பவளவிழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியில் புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

முன்னாள் அதிபர் திரு. பு. சுதிர்தம்பி தலைமை வகித்தார்.

அறிஞர்களின் ஆராய்ச்சிகளும் நூல்களும் அரிய பொக்கிஷங்களாகும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த வரிசையில் அச்சுவேலியில் தோன்றிய சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களின் ஆக்கங்கள் பெறுமதியானவை என்றும் அவர் கூறினார்.

வித்தியாலயத்தின் ஸ்தாபகரான சிவ ஸ்ரீ குமாரசாமிக் குருக்களின் முழு உருவச் சிலை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. (எ-க-11)

மக்களின் மேம்பாட்டுக்கு படைப்பாளிகள் பணிபுரிக!
அஞ்சலிக் கூட்டத்தில் வேண்டுகோள்

''எழுத்தாளர்கள் மக்கள் வாழ்வின் மேம்பாட்டுக்குப் பங்களிக்க வேண்டும். சமுதாய மாற்றத்துக்கான போராட்டத்தில் உறுதியான கொள்கைப் பிடிப்பு உடையவர்களாக அவர்கள் விளங்க வேண்டும்.''

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட எழுத்தாளர் டானியல் அன்ரனி நினைவுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய தேசிய கலை இலக்கியப் பேரவைச் செயலர் திரு. சு. தணிகாசலம் இவ்வாறு கூறினார்.

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் திரு. தில்லைச்சிவன் தலைமையில் அண்மையில் கூட்டம் நடைபெற்றது. ஏழை மக்கள் மேன்மை அடைய வேண்டும் என்ற ஆர்வத்துடன் டானியல் அன்ரனி உழைத்தார் என்று பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தெரிவித்தார்.

மூத்த எழுத்தாளர் வரதர் டானியல் அன்ரனியின் உருவப்படத்தைத் திரை நீக்கஞ் செய்து வைத்தார்.

(எ-க-111)

கூட்டுறவுப் பரிசோதகருக்கு பதவி உயர்வு வழங்குக!
அரசிடம் கோரிக்கை

கொழும்பு, மே 30

கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு உடனடியாகப் பதவி உயர்வுகள் வழங்கும்படி உணவு கூட்டுறவு மற்றும் ஜனசக்தி அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக— 1-8-1989க்குப் பின்னர்— கூட்டுறவு பரிசோதகர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என்றும் —

இதனால் இக்காலப் பகுதியில் ஓய்வு பெற்ற மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர் பதவிகளும் முதலாம் தர கூட்டுறவுப் பரிசோதகர் பதவிகளும் நிரப்பப்படாது இருந்து வருகின்றன என்றும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் மாவட்ட கூட்டுறவு அலுவலகங்கள் மூடப்பட்டு, கூட்டுறவுப் பரிசோதகர்கள் பிரதேசசெயலாளர்களின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பது தெரிந்ததே.

பதவி உயர்வுகள் வழங்கப்படாத காரணத்தினால் கூட்டுறவுப்பரிசோதகர்கள் விரக்தியடைந்துள்ளனர் என்றும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

புலிகளின் குரல் வானொலியில்

30 - 05 - 1994
திங்கள் இரவு
★ 8-01 — கப்டன் வீரத்தேவன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
★ 8-20 — செய்திச்சரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — பிரபல தவில் வித்துவான் கைதடியூர் பழனி அவர்களுடனான செவ்வி.

31 - 05 - 1994
செவ்வாய் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
✶ 7-40 — தாயகப் பாடல்கள்.

மாவீரர் வீரவணக்க கூட்டம்

மாதாந்த மாவீரர் வீரவணக்கக் கூட்டம் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு தீவகக் கோட்டத்தால் யாழ். ரயில் நிலைய ஸ்ரீபன் குடியிருப்பில் நடத்தப்படும். (க)

கணித பாட விசேட வகுப்பு

ஜி. சீ. ஈ சாதாரணதர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாத மாணவருக்கான விசேட வகுப்புகள் யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் விரிவாக்கமாக யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகத்தால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (க)

எமது மண்ணின் நிகழ்வுகள் இன்றே இலக்கியமாக வேண்டும்
திருமறைக் கலாமன்றதமிழ் விழாவில் புதுவை இரத்தினதுரை

குருநகர், மே 30

இன்று இந்த மண்ணில் நிகழும் கொடுமைகளும் அதற்கு எதிரான போராட்ட எழுச்சியும் நாளைக்கு என வைக்கப்படாமல், இன்றே இலக்கியங்களாக, கலைகளாக, நாடகங்களாக உருவாக்கப்பட வேண்டும்:

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்திய மூன்று நாள் தமிழ் விழாவின், இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சிகள் கலாமன்ற அரங்கில், யாழ். பிரதேச செயலாளர் திரு. க. குணராஜா தலைமையில் நடைபெற்றன.

அங்கு பேசுகையில் கவிஞர் புதுவை இரத்தினதுரை மேலும் தெரிவித்ததாவது:

இந்த மண்ணின் வேதனைகள் வெளியில் தெரியப்படுத்தப்பட வேண்டும். அதனைச் செய்யக்கூடிய ஆற்றலும், வசதிகளும் திருமறைக் கலாமன்றத்திற்கு உண்டு. அதனைச் செய்ய மன்றத்தினர் முன்வர வேண்டும்.

இந்த மண் தனது கடமையைச் செய்யவும். இந்த மண் விடியலைப் பெறவும் திருமறைக் கலாமன்றத்தினரின் எதிர்காலப் பணிகள் கால்கோளாக அமைய வேண்டும்.

கலைஞர்கள் சாதாரண மனிதர்களில் இருந்து மாறுபட்டவர்கள். அந்த மாறுபட்ட உடைமைகளை இந்த மண்ணின் விடிவுக்காக நயாகம் பண்ண முன் வருதல் காலத்தின் தேவையாகும்.

கடந்த கால இலக்கியங்களை பிற்பட்டவர்கள் நுகர்ந்ததைப் போல, எமது கால இலக்கியங்களும் எதிர்காலச் சந்ததியினர் அனுபவிக்கும் விதத்தில் அவை படைக்கப்பட வேண்டும். இந்த மண்ணில் நிகழும் கொடுமைகளும், அதற்கெதிரான போராட்ட எழுச்சியும் நாளை என வைக்கப்படாமல் இன்றே இலக்கியங்களாக, கலைகளாக, நாடகங்களாக உருவாக வேண்டும் — என்றார்.

தலைமையுரையில் திரு. க. குணராசா தெரிவித்ததாவது:

''இருள் சூழ்ந்த இக்கட்டான இக்கால கட்டத்தில் எமது கலைகளைப் பேணிக் காத்து வருகின்ற திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் மரியசேவியர் அடிகளார் தமிழுக்கும் இந்த மண்ணுக்கும் பெருமைதேடும் நாடகம் கொண்டவராகக் காணப்படுகிறார்.

இந்த வகையில் இவர்கள் வரலாற்று முக்கியம் பெற்றவர்கள் இம்மன்றம் செய்து வருகின்ற பணி சுதந்திர தமிழீழம் மலர்ந்த காலத்தில் தமிழ் கலைகள் வற்றிவிட்ட பாலைவனமாகக் காணமுடியாதளவுக்கு தமிழிசை, கலைபணிகள் வளப்படுத்தப்படுகிறன'' என்றார்.

பிரம்மஸ்ரீ கி. வை. நித்தியானந்த சர்மா சிறப்புரை நிகழ்த்தினார்.

கலை நிகழ்ச்சிகளில் இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கத்தின் தமிழிசை விருந்தும், இசைத் தென்றல் எம். யேசுதாஸனின் இன்னிசை இசைமுதம் இடம்பெற்றன.

பெண்ணே! உனக்குப் பொன்வேலி
கண்ணே! அது உன் உயிர் கொல்லி

யாழ். ஸ்ரீதரில்

இன்று மட்டும்

பி.பகல் 3.00 மணி. மாலை 6.00 மணி

"மண்ணுக்காக"

நாளை முதல்

புரூஸ்லி நடித்த

GAME OF DEATH

தினசரி பி. பகல் 4 00 மணி
மாலை 6.00 மணி சனி; ஞாயிறு
காலை 10.30 மணி, பி. பகல் 4 00 மணி
மாலை 6 00 மணி
திசைரி பி. ப. 2:30 மணிக்காட்சி மட்டும்

ஏப்ரல் - 94 ஒளிவீச்சு

(சி/8356)

கெருடாவில், தொண்டமனாறு

ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ச. ச. நிலைய

வளர்ச்சிக்காக

28 - 05 - 94 ஆம் திகதி குலுக்கப்பட்ட

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில்

பரிசு பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு

1 ஆம் பரிசிற்குரிய இலக்கம்	325
2 ஆம் பரிசிற்குரிய இலக்கம்	1964
3 ஆம் பரிசிற்குரிய இலக்கம்	2114

ஆறுதல் பரிசில்கள் இலக்கம்

1. 306	2. 1374	3. 2071
4. 2160	5. 2363	6. 38
7. 237	8. 96	9. 383
10. 303		

முக்கிய குறிப்பு:
10 - 06 - 1994 ஆம் திகதிக்கு முன்பு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

- நிர்வாகிகள்.

[31163]

யாழ். மாவட்டச்

சூழல் பாதுகாப்புக் குழுவின்

அறிவித்தல்

உலகச் சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு ஜூன் மாதம் 05ஆம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை இம்மாவட்டத்தில் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம் கொண்டாடப்படும். இது சம்பந்தமாகப் பின்வரும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

★ 06-06-94ஆம் திகதி திங்கட்கிழமை ஒவ்வொரு பாடசாலையிலும், காலை இறை வணக்கத்தைத் தொடர்ந்து ஒரு மணித்தியாலத்திற்குச் சூழல் பாதுகாப்புச் சம்பந்தமாகக் கருத்துரைகளை மாணவர்களுக்கு வழங்க அதிபர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

★ பாடசாலை மாணவர்கள் மத்தியில் சூழல் சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கட்டுரைப் போட்டிகளும் ஓவியப் போட்டிகளும் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும்.

★ இதே நோக்குடைய இவ்வாறான போட்டிகள் பிரதேச செயலர்களினால் பிரதேச செயலக மட்டத்தில் 19-06-94 ஆம்திகதி நடத்தப்படும்.

★ இவ்விரு போட்டிகளும் 15 வயதுக்கு மேற்பட்டோருக்கெனவும், 15 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கெனவும் இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

★ இப்போட்டிகளில் விரும்புவோரெவரும் பங்குபற்றலாம். விரும்புபவர்கள் 10-06 94 ஆம் திகதிக்கு முன்னதாகத் தத்தம் பிரதேசச் செயலர்களோடு தொடர்பு கொள்ளவும்.

★ பிரதேசச் செயலர் மட்டத்தில் நடத்தப்படும் கட்டுரைப் போட்டியிலும், ஓவியப் போட்டியிலும் முதல் ஐந்து இடங்களைப் பெறுபவர்கள் மத்தியில் 26-06-94ஆம் திகதி மாவட்ட ரீதியிலான போட்டி நடத்தப்படும்.

★ சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய சுலோகங்களை அனுப்ப விரும்புவோர் 10-06-94 ஆம் திகதிக்கு முன்னர், தங்கள் சுலோகங்களை யாழ்ப்பாணம் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பலாம். இதற்கும் பரிசுகள் வழங்கப்படும்.

★ போட்டிகள் சம்பந்தமான விவரங்களைக் கல்வித் திணைக்களத்திலும், பிரதேச செயலர்களின் காரியாலயங்களிலும் யாழ்ப்பாணம் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

★ போட்டிகளிலே வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா 03 07-94ஆம் திகதி யாழ். நகரில் இடம்பெறும்.

ஒப்பம்: கா. மாணிக்கவாசகர்
தலைவர்,
யாழ். மாவட்டச் சூழல் பாதுகாப்புக் குழு,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்,
யாழ். மாவட்டச் சூழல் பாதுகாப்புக் குழு,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்.
94-05-27.

(சி-8351)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30-05-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

அதிபர்கள் சந்திப்பு இன்று

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை நாளை 31ஆம் திகதி முதல் ஜூன் 6ஆம் திகதி வரை நடத்த இருக்கின்ற கொடி எழல் பற்றிய கலந்துரையாடல் கல்விக் கோட்டங்கள் வாரியாக இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்குப் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது

ஊர்காவற்றுறை, வேலணை சென். ஜோன்ஸ் அக்கடமி,

★ யாழ்ப்பாணம்:- நல்லூர் யாழ். கல்வித் திணைக்களம்,

★ தென்மராட்சி — சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி,

★ சங்கானை — வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி,

★ சண்டிலிப்பாய்—மானிப்பாய் இந்துக் கல்லூரி,

★ தெல்லிப்பழை — மகாஜனாக் கல்லூரி,

★ உடுவில் — இராமநாதன் கல்லூரி,

★ கோப்பாய் — அத்தியார் இந்துக் கல்லூரி,

★ கரவெட்டி — திருஇருதயக் கல்லூரி,

★ பருத்தித்துறை — மெதடிஸ் பெண்கள் கல்லூரி,

★ மருதங்கேணி — செம்பியன்பற்று றோ. க. பாடசாலை,

★ பளை — பளை மகாவித்தியாலயம்.

அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளார்கள். (க)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் கல்வி வலயம் 1 இற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2. 45 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

சுண்டிக்குளி மகளிர்
கல்லூரி மைதானத்தில்

★ 17 வயதுப் பிரிவு:- வேலணை துரைச்சுவாமி ம. வி. எதிர் வேம்படி மகளிர்

★ 19 வயதுப் பிரிவு:- திருக்குடும்ப கன்னியர் மடம் ம. வி. எதிர் யாழ். இந்து மகளிர் மற்றும் கன்னியர் மடம் தமிழ் ம.வி. எதிர் வேலணை துரைச்சுவாமி ம. வி

கைதடி நவீலட்
பாடசாலையில்

★ 17 மற்றும் 19 வயதுப் பிரிவுகள்:- சாவகச்சேரி மகளிர் எதிர் சுண்டிக்குளி மகளிர்.

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் "உதயன்" வெற்றிக் கிண்ணத்துக்காக கழக மைதானத்தில் நடத்தி வரும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4. 00 மணி:- காங்கேசன்துறை யங்றோயல் வி. க. எதிர் கழுகுகள் வி. க.

★ 4 45 மணி;- எவரெஸ்ட் வி. க. எதிர் கண்ணகி வி. க "ஏ" அணி

★ ★ ★

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி கனகரத்தினம் ம. ம. வி மைதானத்தில் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3. 30 மணி:- சிற்றம்பலம் வி. க "ஏ" அணி எதிர் ஐங்கரன் வி. க. அணி

★ 4. 30 மணி:- நொதேண் வி. க. "பி" அணி எதிர் சாவகச்சேரி ரெக்கிறியேசன் வி. க.

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதியாட்டங்கள் முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் 3 00 மணி முதல் நடைபெறும்.

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் ம ம. வியும், யாழ் மத்திய கல்லூரியை எதிர்த்து மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயமும் விளையாடும்.

இந்திய இடைத் தேர்தல்கள்:

8 லோகசபை தொகுதிகளில் நான்கில் காங்கிரஸ் வெற்றி!

புதுடில்லி, மே 30

இந்தியாவில் ஆறு மாநிலங்களில் நடைபெற்ற நாடாளுமன்றத்தின் எட்டுத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் நான்கில் இந்திரா காங்கிரஸ் வெற்றியீட்டியதாக அறிவிக்கப்படுகிறது.

மகாராஷ்டிர மாநிலத்தில் பாராமதி, அஹமதாபாத் நகர் தொகுதிகளிலும் —

மத்தியப் பிரதேசத்தில் ராஜ்நாட் தொகுதியிலும் —

ஒரிஸ்ஸாவில் மயூர் பஞ்ச் தொகுதியிலும் இந்திரா காங்கிரஸ் வெற்றியீட்டியது.

மேற்கு வங்காளம் — பெர்ஹாம்பூரில் புரட்சிகர சோஷலிஸ் கட்சியும் —

உத்தரப்பிரதேசம் — மீரட்டில் பாரதிய ஜனதாக் கட்சியும் வெற்றியீட்டின.

ஆந்திரமாநிலம் — கர்நூலில் இந்திரா காங்கிரஸ் வெற்றியீட்டியது. ஆனால் இந்த முடிவு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

பீஹார் மாநிலம் - வைசாலித் தொகுதியில் வாக்குகள் எண்ணப்படுவது நேற்றுக் காலை ஆரம்பமானது.

இதேவேளை - எட்டு மாநிலங்களில் நடைபெற்ற பத்து சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் ஐந்து தொகுதிகளில் வெற்றியீட்டியது. (உ-எ)

ஹொனேக்கர் காலமானார்

முன்னாள் கிழக்கு ஜேர்மனியின் 1971 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக இருந்த எரிக் ஹொனேக்கர் தமது 81ஆவது வயதில் நேற்றுச் சிலி நாட்டில் காலமானார்.

உயர்தர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையில் சகல மாணவரும் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும் புதிதாக ஒரு அட்டவணை மதிப்பெண் வழங்கப்படுகிறது.

3. மேற்கண்ட இரண்டும் கூட்டப்பட்டு சராசரி காணப்பட்டு பாடசாலை வாரியாக மாடரிதியான பெறுபேறு மதிப்பெண் பெறப்படுகிறது.

4. இந்த மதிப்பீட்டு முறை எல்லாப் பாடங்களுக்கும் செய்யப்படுகிறது.

5. பின்னர் கூட்டுப் பாட பெறுபேறுகள் எல்லாப்பாடங்களுக்கும் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையால் பிரிக்கப்பட்டு பாடசாலைப் பெறுபேறு மதிப்பெண் பெறப்படுகிறது.

இந்த வகை புள்ளி விபரவியல் முறையில் மொத்தம் 30 பாடசாலை 66 முதல் 56 வரையான பாடசாலை பெறுபேறு மதிப்பெண் பெற்றுள்ளன.

இந்த முப்பது பாடசாலைகளில் பின்வரும் ஒன்பது யாழ் மாவட்டப் பாடசாலைகளும் அடங்கும். அவை [illegible] பெண் [illegible] [illegible] [illegible]

யாழ். இந்துக்கல்லூரி; (66) சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்; (65) ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை, (65) வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை; (58) சென். பற்றிக்ஸ் கல்லூரி யாழ்; (58) சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ் (57), வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். (57); இந்துக் கல்லூரி. சாவகச்சேரி, (56; மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, (56).

கொழும்புப் பாடசாலைகளில் றோயல் கல்லூரி (66), தேவி பாலிகா ம.வி. (66) ஆகியன முதல் அணியில் நிற்கின்றன. அதே அணியிலேயே யாழ். இந்துக் கல்லூரி முன்னணி வகிக்கிறது.

அடுத்த சென். ஜோன்ஸ் கல்லூரி, ஹாட்லி கல்லூரி ஆகியன 65 பாடசாலைப் பெறுபேறு மதிப்பெண்ணைப் பெற்றுஇரண்டாம் அணியைப் பிடித்துள்ளன. இந்த அணியில் கொழும்பு பாடசாலை எதுவும் வரவில்லை.

அதற்குப் பின்னால் விசாக வித்தியாலயம் (62), கொழு[illegible] [illegible] கல்லூரி (60) என்ற வரிசை [illegible]

சுதந்திர சதுக்கத்தில் சமயச் சடங்கு

சந்திரிகாவின் கோரிக்கை அரசினால் நிராகரிப்பு

கொழும்பு, மே 30

மேல்மாகாண சபையின் முதலமைச்சர் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு சமயச் சடங்கினை நடத்துவதற்கு சுதந்திர சதுக்கத்தினை ஒதுக்கித் தருமாறு கோரி மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க விடுத்த கோரிக்கை அரசினால் மறுக்கப்பட்டுள்ளது

இந்தச் சமயச் சடங்குகளை அடுத்த மாதம் 4ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தேசிய ரீதியான வைபவங்களை நடத்துவதற்கு மட்டுமே சுதந்திரச் சதுக்கத்தினைப் பயன்படுத்தும்படியும், சமயச் சடங்குகளை நடத்த அதனை அனுமதிக்க முடியாது என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளனர். (எ-5)

செயல் முறை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 30

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சங்கீதம், நடனம் ஆகியவற்றின் செயல்முறைப் பரீட்சைகள் யாழ் கல்வி வலயம் ஒன்றில் நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களின் அனுமதி அட்டைகளை அதிபர்கள் இன்று தமது திணைக்களத்தின் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்படும் என்றும் வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி அறிவித்துள்ளார். (எ-5)

கைதான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் தமது மைத்துனர் கைதாகி மறியலில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு கொழும்பில் இருந்த நகைக்கடைச் சிப்பந்தி மீண்டும் நீர்கொழும்பு சென்றார். மட்டக்களப்பைச் சேர்ந்த அவர்,மைத்துனரின் நிலையை அறிந்து கலவரமடைந்து விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இப்படிப் பலர் நீர்கொழும்பில் கைதாகின்றனர். இவர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள்; தீவிரவாதத்துடன் தொடர்பில்லாதவர்கள்; இவர்கள் கைதாகும் போது செஞ்சிலுவைச் சங். சர்வதேசக் குழுவினர் எடுத்த நடவடிக்கை யாது? அவர்களை செஞ்சிலுவைச் சங்கத்தினர் சென்று பார்த்தனரா? அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தனரா? அவர்களுக்கு அநியாயம் செய்யப்படுவதை ஆட்சேபித்தனரா?

நான் அறிந்தவரை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் இத்தகையோர் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவரவில்லை. — இப்படி திரு.பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். (உ-எ-6)

தமிழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடைத்தேர்தலில் அ. தி. மு. க. வேட்பாளர் ஐயாயிரத்து 700 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இத் தொகுதியில் அ தி.மு. கவுக்கு, தி.மு க. கடும் போட்டியாக இருந்ததாகவும் —

ம தி மு க. பின்னுக்குத் தள்ளப்பட்டதாகவும் —

காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கட்டுப் பணத்தை இழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-162)

ஒரே நாளில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இக்கைது நடவடிக்கைக்கு பொலீஸாருக்கு கொழும்பில் உள்ள தேச விரோதிகளும் பெரிதும் துணைபோனார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

கைது நடவடிக்கையின் போது பணவசதி படைத்த தமிழர்களின் வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் இவர்கள் ஸ்ரீலங்கா பொலீஸாருக்கு தெரியப்படுத்தினராம்.

வடபகுதியில் இருந்து கொழும்பு சென்ற பலரும் கைது செய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-162)

அவ்ரோ நோட்டம்

ஸ்ரீலங்கா விமானப் படையினரின் அவ்ரோ விமானம் ஒன்று நேற்றுக் காலை 6. 45 மணிக்கு நீர்வேலிப்பகுதியை பல தடவைகள் வட்டமிட்டுச் சென்றது.

நேற்று முன்தினம் மாலையும் இப்பகுதியில் அவ்ரோ வட்டமிட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது. (உ-15)

❋ உங்கள் மின் பிறப்பாக்கி பழுதடைந்து உள்ளதா?
❋ புதிதாக ஒரு மின்பிறப்பாக்கியை அமைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா?
❋ மின் விநியோக வேலைகள் செய்ய வேண்டியுள்ளதா?

கவலை வேண்டாம்

❋ நீண்டகால உத்தரவாதத்துடன் நல்ல முறையில் மின் பிறப்பாக்கிகளைத் திருத்திக் கொள்ளவும்,
★ புதிய மின் பிறப்பாக்கிகளை அமைத்துக் கொள்ளவும்,
❋ மின்விநியோக வேலைகளை திருப்திகரமாகவும், திறமையாகவும் செய்து கொள்ளவும்,

நாடுங்கள்,

சக்திப் பகுதி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

காங்கேசன்துறை வீதி,
தாவடிச்சந்தி,
தாவடி,
தமிழீழம்.

'உங்கள்தேவைக்கு...எங்கள் சேவை'

[சி-8339]

கண்ணீர் அஞ்சலி

வெளிவாரிப் பட்டப்படிப்பு (1994) பேராதனை மாணவி செல்வி கா. காயித்திரிதேவி அவர்களின் அருமைத் தந்தையார்

கொடிகாமம்

காசிப்பிள்ளை காங்கேசன்பிள்ளை

(க. காங்கேசன்)

அவர்களின் பிரிவு அறிந்து பெரும் துயர் உற்றோம். தந்தையின் பிரிவால் வாடும் காயித்திரி தேவிக்கும் குடும்பத்தினருக்கும் எங்கள் அனுதாபங்களுடன் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

மாணவ, மாணவிகள்,
(பேராதனை - 1994)
விரிவுரையாளர்கள,
நிர்வாகிகள்.

புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(31164)

மரண அறிவித்தல்கள்

சிதம்பரநாதக்குருக்கள் நகுலாம்பிகை அம்மா

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த சிதம்பரநாதக் குருக்கள் நகுலாம்பிகை அம்மா அவர்கள் 28 -05 -94 அன்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரநாத குருக்களின் அன்பு மனைவியும், திருமதி. கார்த்தியாயனி அம்மா, காலஞ்சென்ற சங்கரநாராயண ஐயர் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்), வெங்கடேச சர்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ஹரிஹரசர்மா (ஓய்வு பெற்ற பணிப்பாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), சதாசிவ சர்மா (தபால் அதிபர் கொட்டாஞ்சேனை), தியாகராஜக்குருக்கள் (சுழிபுரம் சம்பனை அம்பாள் ஆலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியக் குருக்கள், மற்றும் சுந்தரகுணநாயகி, சிவகாமி, கமலாதேவி, வசந்தி, ஜெயவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் 29-05-94 (ஞாயிறு) சுன்னாக மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சி. வெங்கடேச சர்மா
(மகன்)

7/7, மயிலணி,
சுன்னாகம்.

(31169)

முத்துக்குமாரு ஆலாலசுந்தரம்

வடலியடைப்பைச் சேர்ந்த முத்துக்குமாரு ஆலாலசுந்தரம் 29 - 5 - 94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், யோகராணி, காலஞ்சென்ற நற்குணராசா, பத்மநாதன், சிவயோகமலர், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவசுப்பிரமணியம், வரதலட்சுமி ஸ்ரீதரன், கலாறஞ்சினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற ஜெனார்த்தனன், சிவானி, சாமினி ராஜீவ், அர்ச்சனா, நிஷாகரன், நஜீந்தன், நிஷாறா, நிருஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (30 - 5 - 94) பி. ப. 3.00 மணியளவில் நடைபெற்று கிளாவெளி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. தனபாலசிங்கம்
(மகன்)

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(31171)